DVC 05/2023

Date : 26.04.2024

PW1 - சரண்யா க/பெ. தனசேகரன்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் +2 வரை படித்துள்ளேன். நான் வேலைக்கு போகவில்லை, எனது தாய், தந்தையுடன் வசித்து வருகிறேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் ஒரு தம்பி மற்றும் ஒரு தங்கை. எனது கணவருடன் உடன்பிறந்தவர்கள் யாரும் கிடையாது.

2. எனது மாமியாருக்கு கண் பார்வையற்றோர் என்றால் சரியல்ல, எனது மாமியாருக்கு நன்கு கண் தெரியும். எனது மாமனார் வயது 85 இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மாமியாரையும், மாமனாரையும் பாதுகாக்கும் பொறுப்பும், கடமையும் எனது கணவரை சார்ந்தது என்றால் சரிதான்.

3. நான் கல்யாணம் முடிந்து எனது கணவருடன் 6,7 மாதங்கள் இருந்தேன். அதன்பிறகு எனது பெற்றோர் வீட்டுக்கு வந்தேன். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழும்போது கூட்டுக்குடும்பாக சேர்ந்து வாழ்ந்தோம்.

4. என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். எனது கணவர் எந்த ஊரில் எலக்ட்ரானிக்ஸ் கடைக்கு வைத்துள்ளார் என்று மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சென்னை என்று குறிப்பிட்டுள்ளேன் எந்த இடம் என்று குறிப்பிடவில்லை.

5. 1ம் எதிர்மனுதாரர் கடை வைத்திருக்கவில்லை என்பதால் நான் இடத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சீர்வரிசை சாமான்கள், நகைகள் குறித்து ஆவணங்கள் எதுவும் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. நகைகள் -12 பவுன் திருமணத்தின்போது செய்யாததால் காரணத்தினால் அதை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்களிடம் எந்த சீர்வரிசையும், நகைகளும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. 1ம் எதிர்மனுதாரர் என்னை திருமணம் செய்து கொண்டதற்கு காரணமே எனது மாமியார், மாமனாரை பார்த்து கொள்வேன் என்று காரணத்தினால் திருமணம் செய்து கொண்டார் என்றும், ஆனால் நான் எனது மாமனார், மாமியாரை கவனித்துக்கொள்ளவில்லை என்றால் எதிர்மனுதாரர்கள் என்னை வீட்டிலேயே இருக்க வைத்துகொள்ளவில்லை.

8. என்னை அடித்து கொடுமைபடுத்திய தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

9. நான் தான் 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது பெற்றோர்களையும் எந்த பணிவிடையும் செய்யாமல் அவர்களுடன் சண்டை போட்டுவிட்டு எனது தாயார் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்புறுத்தி எனது தாயார் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

10. நான் எந்த மருத்துவமனையில் சிகிச்சை அளித்தேன் என்ற விபரத்தை மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சென்னையில் வசிக்கவில்லை என்றாலும், நான் எதிர்மனுதாராருடன் சேர்ந்து வாழவில்லை என்றாலும் சரியல்ல, நாங்கள் சென்னையில் தான் வசித்து வந்தோம். அதனால் தான் மனுவில் வசித்து வந்த இடத்தை பற்றி மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

11. 1ம் எதிர்மனுதாரரின் சொத்து விபரங்கள் பற்றிய எனது மனுவில் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, ஆனால் வீடு இளையாங்குடியில் உள்ளது.

12. எங்களை வீட்டில் வசிக்க வைக்கவில்லை, எந்த அடிப்படை தேவைகளும் செய்து தரவில்லை. குழந்தைகள் படிப்பு மற்றும் மருத்துவ செலவுகளுக்கும் எதுவும் கொடுக்கவில்லை அதனால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

13. தற்போது 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் வீட்டில் வசித்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் என்னை அடித்து சித்ரவதை பண்ணுவார். என்னுடன் 1ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் அது பொய். நான்தான் வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

14. 1ம் எதிர்மனுதாரருக்கு வீடு, வாசல் எதுவும் கிடையாது என்றாலும், அவர் கூலி வேலை பார்த்து பெற்றோர்கள் பாதுகாத்து வருகிறார் என்றாலும் சரியல்ல, 1ம் எதிர்மனுதாரருக்கு வீடு வாசல் உண்டு.

15. 1ம் எதிர்மனுதாரர் அறந்தாங்கியில் கூலி வேலை செய்து குழந்தைகளுக்கு படிப்பு செலவிற்கு பணம் கொடுத்தார் என்றால் கொடுக்கவில்லை. நான்தான் 1ம் எதிர்மனுதாராரை அவர்களது பெற்றோர்களை விட்டுவிட்டு எனது பெற்றோர் வீட்டில் வந்து தங்கும்படி நான்தான் சொன்னேன் என்றால் சொல்லவில்லை.

16. நான் சொல்வதுபோல் 1ம் எதிர்மனுதாரர் அடித்து துன்புறுத்தவும் இல்லை என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு சாப்பாட்டுக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் மருத்துவ செலவிற்கு பணம்

கொடுக்கவில்லை என்றாலும், உண்மையை மறைத்து பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

17. நான் 1ம் எதிர்மனுதாராருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லாததால் காரணத்தினால் இந்த மனு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.